பக்கங்கள் 25+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 29 திங்கட்கிழமை 12.05.2025 | அதிர்வு 282

## தென்னிலங்கையில் வயோதிபத் தம்பதி மர்மக் கொலை!

07

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இடம்பெயராமல் இருந்திருந்தால் இன்று எங்கேயோ முன்னேறிச் சென்றிருப்போம்

### மயிலிட்டி நிகழ்வில் ஆளுநர் கவலையுடன் தெரிவிப்பு

“நாங்கள் எமது பகுதிகளை விட்டு இடம்பெயராமல் இருந்திருந்தால் இன்று நாம் எங்கேயோ முன்னேறிச் சென்றிருப்போம். அதைக் கற்பனை செய்து பார்க்கவே மகிழ்ச்சியாக இருக்கின்றது. இடப்பெயர்வின் வலி உங்களைப் போல் எனக்கும் நன்றாகவே தெரியும். நானும் உங்களைப் போன்று இடம்பெயர்ந்து சென்ற ஒருவன் தான்.”

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். 06



## சட்டவிரோத தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

சட்டவிரோத தையிட்டி விகாரைக்கு எதிராக பௌர்ணமி தினமான இன்று திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ். தையிட்டியில் மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்தச் சட்டவிரோத விகாரைக்கு எதிராக காணி உரிமையாளர்கள் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில், அந்தப் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.



# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முள்ளிவாய்க்காலில் சிரமதானம்!




முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் மக்களோடு இணைந்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.








# வல்வெட்டித்துறையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

(எஸ்.நிதர்ஷன்)

முள்ளிவாய்க்கால் இனப்படு கொலையை நினைவுகூர்ந்து யாழ்ப் பாணம் பல்கலைக்கழக மாணவர் களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

வல்வெட்டித்துறையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லத்துக்கு அருகில் உள்ள ஆலடிப் பகுதியில் இன்று கஞ்சி வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களால் அந்தப் பகுதி மக்களிடம் அரிசி சேக ரிக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு சிரட்டைகளில் பொது மக்களுக்கும், வீதியில் சென்றவர் களுக்கும் வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படு கொலை வார காலப் பகுதியை தமிழ் மக்கள் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்றும், கேளிக்கை ரீதியான நிகழ்வுகளையோ – நினைவுகூரலை அவமதிக்கும் வகையான செயற்பாடு களை இந்தக் காலப்பகுதியில் தமிழ் மக்கள் தவித்துக்கொள்ள வேண்டும் என்றும் யாழ். பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் கோரிக்கை விடுத்தது.

அதேவேளை, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து எதிர்வரும் மே 18 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு தமிழர் தாயகமெங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியை வழங்க யாழ். பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.


















# தையிட்டியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், தையிட்டி சட்ட விரோத விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

தையிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக் கோரி இன்று திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

போராட்டக் களத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு , போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்த நிலையில் , அவர்களுக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.












## வெசாக் தினத்தை முன்னிட்டு

# யாழ். சிறையில் இருந்து 20 கைதிகள் விடுதலை

(எஸ்.நிதர்ஷன்)

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 20 கைதிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் 388 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்களுக்காகமக் குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



அதில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 20 கைதிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் டி.ஐ.ஜெயவர்த்தன உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் கைலாகு கொடுத்து வழியனுப்பி வைத்தனர்.




# வவுனியா சிறையில் இருந்து 7 கைதிகள் விடுதலை

(கி.வசந்தன்)

வெசாக் தினத்தை முன்னிட்டு கணாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் கைதிகள் விடுதலை இடம்பெற்ற நிலையில் வவுனியா சிறைச்சாலையில் இருந்தும் 7 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களோடு சம்பந்தப்பட்ட 7 கைதிகள் இன்று இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் பி. டபிள்யூ.எச். மதுசங்க தலைமையில் கைதிகள் விடுவிப்பு இடம்பெற்றது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இடம்பெயராமல்...**

மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய சனசமூக நிலையத்துடன் இணைந்த கல்வி நிலையக் கட்டடத் திறப்பு விழா மயிலிட்டி சனசமூக நிலைய வீதியில் இன்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர், தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து கட்டடத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்ததுடன், பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார். அதன் பின்னர் இடம்பெற்ற மேடை நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது,

“தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் உதவி அரச அதிபராக நான் கடமையாற்றியிருக்கின்றேன். 1996ஆம் ஆண்டு நாம் இங்கு வந்தபோது இடம்பெயராமல் தங்கியிருந்த தையிட்டி மக்கள் சிலரை இராணுவத்தினருடன் வந்து நான் பார்வையிட்டிருந்தேன். அப்போது மயிலிட்டி உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வீடுகள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்ததை நான் நேரடியாகக் கண்டிருந்தேன்.

2015ஆம் ஆண்டு மாவட்ட செயலராக யாழ். மாவட்டத்துக்கு நான் வந்த பின்னர் மயிலிட்டிப் பகுதியை வந்து பார்வையிட்டபோது அதிர்ச்சியாகவும் கவலையாகவும் இருந்தது. நல்ல நிலையில் இருந்த வீடுகள் பலவும் இடித்து தரை மட்டமாக்கப்பட்டிருந்தன.

2015ஆம் ஆண்டு மாவட்ட செயலராக நான் வரும்போது மாவிட்டபுரம் சந்தி வரையிலேயே முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் படிப்படியாக இங்கே மீள்குடியேற்றம் நடைபெற்றது.

அன்றைய காலத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்கா, தர்சன ஹெட்டியாராச்சி ஆகியோர் மீள்குடியமர்வு செயற்பாட்டுக்கு முழுமையாக ஒத்துழைத்திருந்தார்கள். அவர்கள் இன்னும் சில காலம் இருந்திருந்தால் மேலும் பல காணிகளை எம்மால் விடுவித்திருக்க முடியும்.

காணிகளை விடுவிக்கும்போது மகேஸ் சேனநாயக்க சொல்வார், நீங்கள் அடுத்த வாரமும் எங்களிடம் வருவீர்கள். அடுத்த காணிகளை விடுவிக்கக் கோருவீர்கள் என்று நகைச்சுவையாகச் சொல்வார். அப்படித்தான் இந்தக் காணி விடுவிப்புக்களைச் செய்தோம்.

மாவட்ட செயலராக இருந்தபோது என்னுடன் மிகச் சிறந்த அணி இருந்தது. அப்போது யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட செயலர் – காணி – பணியாற்றிய முரளிதரன் மற்றும் இந்தப் பகுதி பிரதேச செயலர்களாக இருந்த சிறிமோகன், சிவசிறி ஆகியோரும் என்னுடன் இராணுவத்தினருடன் கலந்துரையாட வருவார்கள். அடிக்கடி இராணுவத்தினரைச் சந்தித்து காணி விடுவிப்புக்கான கோரிக்கையை முன்வைத்தே இவற்றைச் சாத்தியமாக்கியிருந்தோம்.

தற்போது இங்கு வரும்போது இந்தப் பகுதிகளைப் பார்வையிடும்போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. வீடுகளை அமைத்துக் கட்டடங்களை அமைத்து முன்னேறியிருக்கின்றீர்கள். உங்கள் கிராமத்தை வளர்ச்சியடையச் செய்திருக்கின்றீர்கள்.

நிகழ்வின் தலைவர் தனது உரையில் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். நான் அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே இந்தப் பகுதிக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். ஸ்ரீபவானந்தராஜாவுடன் பேசிக் கொண்டிருந்தேன். விரைவில் விசேட கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தி உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவோம்.” – என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, நீண்ட காலம் மூடப்பட்டிருந்த பலாலி வீதி திறக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியதுடன் காணி விடுவிப்புத் தொடர்பில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ. சுகிர்தன், இந்தப் பிரதேச மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

திருப்பூர் இளைஞர் நன்பணி ஒன்றியக் கட்டடம் 3 கோடி ரூபாவுக்கும் அதிகமாக நிதியில் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











# தென்னிலங்கையில் வயோதிபத் தம்பதி மர்மக் கொலை!



கம்பஹா மாவட்டத்தில் கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கன்னிமஹர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கணவரும், மனைவியும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கிரிந்திவெல, கன்னிமஹர பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய கணவரும், 79 வயதுடைய மனைவியுமே மர்மமான முறையில் படுகொலை செயயப்பட்டுள்ளனர்.

அவர்களின் சடலங்கள் வத்துப்பிட்டிவல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காத்திருக்கிறது 'ஷொக்'!

நாட்டு மக்களுக்கு விரைவில் 'ஷொக்' அடிக்கும் செய்தி ஒன்று காத்திருக்கின்றது. பெரும்பாலும் அது உறுதியாகிவிட்டது.

விரைவில் மின்சாரக் கட்டணம் 25 வீதம் முதல் 30 வீதம் வரை உயரும் என்று செய்திகள் வெளியாகி உள்ளன. பெரும்பாலும் இந்த முடிவுக்கு அரசு தீர்க்கமாக வந்துவிட்டதாகவும் தெரிகிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சம் புகுந்திருக்கும் அரசு, இத்தகைய விவகாரங்களில் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் கட்டுப்பாடுகள், வழிகாட்டல்களுக்கு இணங்கிச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

மின்சார உற்பத்தியால் ஏற்படும் செலவினங்களைச் சமாளிப்பதற்கு மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்துவதாகவும், அதனால் அந்த முடிவுக்கு அரசு தள்ளப்பட்டு இருப்பதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

மின் கட்டணத்தை அதிகரித்து மக்கள் வயிற்றில் அடிப்பதை - மக்களை வாட்டுவதை - உடனடியாக நிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தைக் கோரியிருக்கிறார்.

மின் கட்டணத்தை கணிசமாகக் குறைப்போம் என்று வாக்குறுதி கூறி, ஆட்சிக்கு வந்த அரசு மக்களை பெரும் நெருக்கடியில் ஆழ்த்தும் விதத்தில் மின்கட்டணத்தை அதிகரிக்க இருப்பது கண்டனத்துக்குரியது என அவர் தெரிவித்திருக்கிறார்.

மின் கட்டண அதிகரிப்பு - அதுவும் 25 முதல் 30 சதவீத அதிகரிப்பு - நாட்டின் பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்க்கைச் செலவிலும் தொடர் தாக்கங்களை ஏற்படுத்தும். பொருள்கள் விலைகளில் இருந்து சேவைகள் கட்டணங்கள் வரை எல்லாம் பெரும் அளவில் எகிறும். ஏற்கனவே நெருக்கடியில் இருக்கும் மக்கள் இந்தச் சிக்கலை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறுவார்கள்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால், சர்வதேச நாணய நிதியத்துடன் முந்திய அரசாங்கம் செய்து கொண்ட இலங்கையின் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை மறுபரிசீலனை செய்வோம் என்று வாக்குறுதி அளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசு, அவற்றை மறந்து முன்னைய அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளை அப்படியே செயல்படுத்துவதன் விளைவுதான் இத்தகைய மின்சார கட்டணத்தை உயர்த்தும் கட்டாயத்தை தந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டுகிறார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஜூலை மாதம் நடைபெற உள்ள மீளாய்வுக்கு முன் மின்சார கட்டணத்தை உயர்த்தி நாணயச்நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என இப்போது தெரிய வருவதாக எதிர்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டுகிறார்.

போதாக்குறைக்கு இந்த நிலைமை ஏற்பட்டதற்கு இலங்கை மின்சார சபையின் பொறுப்பற்ற நடவடிக்கைகளும் காரணம் என்று கூறப்படுகின்றது. இலங்கை மின்சார சபையின் தலைவர் குறுகிய ஏழு, எட்டு மாத காலத்துக்குள் பதவி விலகும் சூழ்நிலையில் இத்தகைய குற்றச்சாட்டுகளும் வெளிவருகின்றன.

எது, எப்படியாயினும் மின்சார கட்டணம் 25 முதல் 30 வீதம் வரை அதிகரிப்பது நிச்சயமாக நாட்டு மக்களுக்கு 'ஷொக்' அடிக்கும் செய்தியாகத்தான் இருக்கும்.



# தற்போதைய அரசும் தமிழ்த் தேசிய இனத்தை உதாசீனப்படுத்தும் போக்கிலேயே உள்ளது!

## தமிழ் இன அழிப்பு வார ஆரம்ப நிகழ்வில் சிறிநாத் எம்.பி. தெரிவிப்பு

**(வாலகிருஸ்ணா)**

தற்போதைய அரசும் தமிழ் தேசிய இனத்தை உதாசீனப்படுத்துகின்ற – அலட்சியப்படுத்துகின்ற – நியாயமான கோரிக்கையைச் செவிமடுக்காத போக்கிலேயே உள்ளது. தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் நியாயமான உரிமைகளும் உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே இந்த பௌத்த சிங்கள பேரினவாத அரசு நடந்து கொள்கின்றது.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளுக்கான நீதியான நடவடிக்கைகள், தாயக நிலங்கள் விடுவிக்கப்படும் வரையில் இந்த நாடு முன்னேற்றகரமான நிலைக்கு செல்லமுடியாது என்ற விடயத்தைச் சிங்க அரசும் சிங்கள தேசிய இனமும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத் தெரிவித்தார்.

தமிழ் இன அழிப்பு வாரம் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

எங்கெங்கு தமிழர்கள் கொத்துக் கொத்தாக அழிக்கப்பட்டார்களோ அங்கு எல்லாம் இன அழிப்பு வார நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன. இந்த சத்துக்கொண்டான் பகுதியில் பாரிய படுகொலைகள் நடத்தப்பட்ட வரலாறுகள் இருக்கின்றன.

ஒரு இன அழிப்பு நோக்குடன் வடக்குக் கிழக்கில் பல படுகொலைகள் நடத்தப்பட்டதுடன் எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காகப் பல இடங்களில் படுகொலைகள் நடத்தப்பட்டிருந்தது.

சத்துருக்கொண்டானில் நூற்றுக் கணக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்த விசாரணைகள் பின்னர் முடக்கப்பட்டன.

இன்று இந்த அரசு பட்டலந்த வதை முகாம் விடயங்களை கையிலெடுத்து அது தொடர்பான விசாரணைகளை மீள முன்னெடுத்திருக்கும் அதேநேரம் வடக்குக் கிழக்கில் பல இடங்களில் படுகொலைகள் நடைபெற்ற வரலாற்றின் சாட்சியங்கள், ஆவணங்கள் இருக்கின்ற போதிலும் அது தொடர்பான எந்த முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படாமல் தமிழ் மக்களை உதாசீனப்படுத்துகின்ற – அவர்களின் நியாயமான கோரிக்கையைச் செவிமடுக்காத போக்கு காணப்படுகிறது.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதற்கான உறுதிப்பாடற்ற நிலையில் அவர்களுக்கான நியாயமான உரிமைகள், அவர்களின் சுதந்திரமான வாழ்க்கைக்கான உறுதிப்பாடுகள் இல்லாத நிலையிலேயே சிங்கள பௌத்த தேசிய அரசுகள் நடந்து கொள்கின்றன.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பொது மக்கள் கொத்துக் கொத்தாக லட்சக் கணக்கில் கொல்லப்பட்ட சம்பவமானது தமிழினத்தை இந்த நாட்டில் இல்லாமல் செய்வதற்கும், வடக்குக் கிழக்கு தாயப் பகுதியில் தமிழ் மக்களின் இனப் பரம்பலைக் குறைத்துக் கையேந்தும் நிலையில் தள்ளும் நிலையையே உணர்த்தி நிற்கிறது.

நிர்க்கதியற்ற நிலையில் தமிழ் மக்கள் வாழவேண்டும். தமிழ் மக்கள் தமது உரிமைகளை இனி ஒருபோதும் போராடிக் கேட்கக் கூடாது என்ற அடிப்படையிலே பல்வேறு திட்டமிட்ட படுகொலைகள் நடந்தேறியது.

இந்த படுகொலைகளுக்கான நீதி நியாயம் கூட எந்தவகையான வழிகளிலும் கிடைக்கவில்லை. யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் நீதி நியாயத்துக்காகத் தமிழ் தேசிய சக்திகள், தமிழ் இனத்தில் பற்றுக்கொண்ட அமைப்புகள் போராட்டங்களை முன்னெடுக்கின்ற போதிலும் அதற்கான எந்த அங்கீகாரத்தையும் இந்த நாடு வழங்கவில்லை. இவ்வாறான செயற்பாடுகள் இந்த நாட்டில் நியாயமாக, நிம்மதியாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை இல்லாமல் செய்துள்ளது.

இன்று இந்தப் பொருளாதார நெருக்கடிக்குக் கூட தமிழ் மக்கள் இரண்டாம் தரப்பாக அடக்கி ஒடுக்கப்படுதலே காரணமாக அமைந்திருக்கின்றது. இவற்றைச் சிங்கள தேசிய இனம் புரிந்துகொள்ளாத நிலையில் இந்த நாடு சுபீட்சமான நாடாக மாறுவதற்கு எந்தவிதமான வாய்ப்புகளும் இல்லை.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளுக்கான நீதியான நடவடிக்கைகள், தாயக நிலங்கள் விடுவிக்கப்படும் வரையில் இந்த நாடு முன்னேற்றகரமான நிலைக்குச் செல்லமுடியாது என்ற விடயத்தைச் சிங்கள அரசும் சிங்கள தேசிய இனமும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஒரு இனத்தின் விடுதலையானது, ஒரு இனத்தின் இருப்பானது மிக காத்திரமான முறையில் ஒரு அரசால் பாதுகாக்கப்படாதுவிட்டால், நாட்டில் மக்கள் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் வாழும் நிலை ஏற்படும். அந்தவகையில் 2009 ஆம் ஆண்டு ஏற்பட்ட இன அழிப்புக்கு நீதி நியாயம் கிடைக்க வேண்டும். இந்தச் சம்பவங்கள் எமது அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

இவ்வாறான படுகொலைகளும் அடக்கு முறைகளும் கடந்த காலத்தில் நடைபெற்றது என்பதை எதிர்கால சந்திக்கு கொண்டு சென்று எமது தமிழ் தேசியத்துக்கான தொடர்ச்சியான போராட்டத்தையும் தமிழ் தேசிய விடுதலைக்கான போராட்டத்தையும் எமது இளம் சந்ததிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.– என்றார்.

# மாற்றுவலுவுடைய குடும்பத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வீடு

## 19 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியில் அமைப்பு







முல்லைத்தீவு – கனகராஜன் குளம், பெரியகுளம் கிராமத்தில் புதிய வீடு அமைத்துக் கையளிக்கும் நிகழ்வு, நேற்று (11) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தங்கோடை, காரைநகரை சேர்ந்த அமரர்களான கனகலிங்கம் – பத்மாவதி நினைவாக, அவர்களின் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஒழுங்கமைப்பில் 19 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைத்தார். பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்து, மங்கல விளக்கு ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர்கள், சமூக செயற்பாட்டாளர் இ.தயாபரன் மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# முள்ளிவாய்க்காலில் நடந்த அவலத்தால் தமிழினம் அழிவைச் சந்தித்திருக்கின்றது

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் தம்பிராசா செல்வராணி



**(பாறுக் ஷிஹான்)**

இன்று 12ஆம் திகதி முதல் எதிர்வரும் 18ஆம் திகதிவரை முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமாகும். அதாவது முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரத்தை வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் அனைத்துப் பொது மக்களும் உணர்வு பூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணைய வேண்டும் என்று வடக்கு கிழக்கு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவியுமாகிய தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதியில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்த கருத்துத் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம், முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்று முடிந்த போர் காரணமாக ஓர் இனம் அழிந்த ஒரு கதையாகவும் இரத்த ஆறு ஓடிய நாளாகவும் இது உள்ளது. எங்கள் உறவுகள் குடும்பம் குடும்பமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நாளாக அனுஷ்டிக்கும் ஒரு முக்கியமான நாளாகும். ஒரு இன அழிப்பு வாரமாக வடக்கு, கிழக்கில் அனுஷ்டிக்கப்பட இருக்கும் இந்த வாரத்தில் 16 வருட காலமாக வலிகளைச் சுமந்து எங்களது உறவுகளுக்கான நீதி கிடைக்காமல் இன்றுவரை நாங்கள் வீதிகளில் கண்ணீருடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்களுக்கான உரிய நீதி கிடைக்கும்வரை இந்தப் போராட்டத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்று நீதியைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்ல உண்மையில் அந்த முள்ளிவாய்க்கால் பகுதியில் இலங்கை அரசு அங்கு போர் நடந்து கொண்டிருக்கும் போது பொருளாதார தடையை விதித்து, உணவு கூட அந்தப் பகுதிக்கு எடுத்து செல்ல முடியாத காலகட்டத்தில் அங்கு பட்டினி சாவு ஏற்பட்டது.

ஆனால் எமது உறவுகள் உப்பில்லாது அரிசியை அவித்து அங்குள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக கஞ்சி தயாரித்தனர். அதுதான் அந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியாகும். அன்று முள்ளிவாய்க்காலில் அந்தக் கஞ்சிக்கு வரிசையில் நின்று கொண்டிருக்கும் வேளையில் எத்தனையோ செல் தாக்குதல்கள் விமானத் தாக்குதலுக்குமத்தியிலும் கஞ்சிச்சிரட்டையுடன் உறவுகள் அவ்விடத்தில் மரணம் அடைந்தார்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் தனக்கும் இவ்வாறான வலி தெரியும் எனவும் தனது தாயும் பிள்ளையை தொலைத்து விட்டு கண்ணீர் வடித்த காலமாகும் எனக் கூறி இன்று ஆட்சிக்கு வந்திருந்தார்.

ஆனால் இதுவரை காலமும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன செய்யலாம். என்ன செய்ய முடியும் என்ற தீர்மானம் எதையும் அவர் மேற்கொள்ளவில்லை. ஆனால் அன்று ஒரு நாள் பயங்கரவாத தடைச் சட்டத்தைத்ள தடை செய்வேன் அல்லது இல்லாமல் செய்வேன் என்று கூறியவர் இன்று அவர் ஆட்சியில் வந்தும் அதற்கான எந்த ஒரு ஏற்பாடுகளையும் செய்யவில்லை. இன்று அவர் நல்லாட்சி அரசு என்று கூறிக்கொண்டு இங்கு உள்ள எமது இளைஞர்களையும் இங்குள்ள தமிழ் மக்களையும் நல்லாட்சி என்ற போர்வையில் இவ்வாறான சட்டங்களை வைத்து கைது செய்து கொண்டிருக்கிறார். ஆனால் இன்று இந்த அநுர அரசு பற்றியும் எமக்கு எவ்வாறான தீர்வுகளை தருவார்கள் என்றும் எமது இளைஞர்களுக்கு இதுவரை தெரியாது.

ஆனால் எங்களுக்கு அவர் குறித்து தெரியும். கடந்த காலங்களில் எத்தனை ஜனாதிபதிகளை நாங்கள் கடந்து வந்திருக்கின்றோம். எத்தனை அரசுகளைக் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால் எங்களுக்கு எந்த விதமான ஒரு பதிலும் கிடைக்கவில்லை. எமக்கு எந்தவிதமான ஒரு தீர்வும் கிடைக்கவில்லை. அதன் பிற்பாடுதான் நாங்கள் இன்று சர்வதேசத்தை நாடி இருக்கின்றோம். அது மட்டுமல்ல மீண்டும் ஓ. எம். பி. ஐ. எங்களிடம் முன் வைக்கிறார்கள்.

இந்த உள்ளக பொறிமுறை வேண்டாம் எனக் கூறியும் இவ்வாறு அவர்கள் செயற்படுகின்றார்கள். நாங்கள் இன்று சர்வதேசப் பொறிமுறையை நாடி இருக்கின்றோம்.

இந்த முள்ளிவாய்க்காலில் எங்களுக்கு நடந்த அவலம் காரணமாக எமது இனமான தமிழினம் அழிவைச் சந்தித்திருக்கின்றது. ஒரு தமிழ் இனமே அங்கு அழிந்திருக்கின்றது. எனவே இந்த வாரத்தை உணர்வு பூர்வமாக மேற்கொள்ள மதகுருமார்கள், ஓட்டோச் சங்கத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர் ஒன்றியங்கள், விளையாட்டு கழகங்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், பொது மக்கள், அரசியல்வாதிகள் என அனைவரையும் நாங்கள் அழைக்கின்றோம்.- என்றார்.



# வேகமான எழுத்துக்கும் சிந்தனைக்கும் உரிய மூத்த பத்திரிகையாளர் காசிலிங்கம்!





வி. ரி. இளங்கோவன்

அச்சு இயந்திரக் கண்டுபிடிப்பு அறிவுலகத்தில் ஒரு பெரும் புரட்சியைச் செய்தது. கருத்துப் பரவலுக்கு நூல்கள் - பத்திரிகைகள் முதன்மைக் கருவிகளாயின. ஈழத்தில் அமெரிக்க மிசனரிமார் முதன் முதலாக 1841 இல் (07 - 01 - 1841) "உதயதாரகை" (Morning Star) என்னும் பத்திரிகையை ஆரம்பித்தனர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இது வெளிவந்தது. இதன் ஆசிரியராகக் கரோல் விசுவநாதபிள்ளை விளங்கினார் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1930 இல் 'யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் பகிஸ்கரிப்புக் கோரிக்கைக்கு வலுவூட்டும் அரசியல் கருத்துகளுடன் "ஈழகேசரி" வெளிவந்ததாகக் கூறுவதுண்டு.

ஈழத்தின் அரசியல், சமூக, பொருளாதார, இலக்கிய வளர்ச்சியில் மிகக் கவனம் செலுத்திய ஈழகேசரி இருபத்தெட்டு ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது.

ஈழத்தில் நவீன தமிழ் இலக்கியத்தின் ஆரோக்கியமான ஆரம்பத்துக்குத் தளமாக ஈழகேசரி அமைந்து படைப்பாளிகளை இனங்காண வைத்தது என்றால் மிகையல்ல.

நாளேடுகளாக 1930 இல் வீரகேசரியும் 1932 இல் தினகரனும் தலைநகர் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கின. வேறு சில நாளேடுகளும் வெளிவரத்தொடங்கி சிறிது காலத்திலேயே அவை நிறுத்தப்பட்டுவிட்டன.

சகோதரர்கள் இருவரின் (கே. சி. தங்கராஜா, கே. சி. சண்முகரத்தினம்) சிந்தனையில் உருவாகியது 'ஈழநாடு" பத்திரிகை.

யாழ்ப்பாணத்தில் இருந்து இதன் முதல் இதழ் 09 - 02 - 1959 இல் வெளிவந்தது. வாரப் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கிப் பின்னர் 1961 இல் தினசரியாக மலர்ந்தது.

தலைநகர் கொழும்புக்கு வெளியே ஓர் பிராந்தியத் தமிழ்ப் பத்திரிகையாக "ஈழநாடு" தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.

தமிழ்பேசும் சகல மக்களின் நலன்கருதி, மக்களின் உணர்வுகளை, வாழ்வுமுறைகளை, சம்பிரதாயங்களைப் பிரதிபலிக்கும் பத்திரிகையாக ஈழநாடு வெளிவரத் தொடங்கியது.

1961 ஆம் ஆண்டு யாழ். கச்சேரி முன்றலில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்ட காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் "ஈழநாடு" செய்தி சொன்னது. பாடசாலை ஆசிரியர்கள், படைப்பாளிகள் கைகளில் மிதந்தது.

அந்தக் காலத்தில் ஈழநாடு பல பதிப்புகள் (மாலைப் பதிப்பு - பிராந்தியப் பதிப்பு) வெளியாகியதுண்டு.

கோகிலாம்பாள் கொலை வழக்கு, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப் பிரவேசப் போராட்டம், பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டம், 1971 ஏப்ரல் கிளர்ச்சி, தமிழாராய்ச்சி மாநாடு, பயங்கரவாதத் தடைச்சட்ட அமுல், இளைஞர்கள் கொலை போன்ற நிகழ்வுகளின் போதும் ஈழநாடு மக்கள் கவனத்தை மிகவும் ஈர்த்தது.

1984 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "ஈழநாடு 25 ஆவது ஆண்டு நிறைவு மலர்" சிறந்த ஆவணப் பதிவாகும். ஈழநாடு பத்திரிகை செய்தித் தணிக்கைகள், அச்சுறுத்தல்கள் எனப் பலவேறு நெருக்கடிகளைக் கண்டது. குண்டுத் தாக்குதலுக்குமுள்ளானது. தீக்குளித்து மீண்ட ஈழநாடு தொண்ணூறுகளின் தொடக்கத்தில் தன் இயக்கத்தை நிறுத்த வேண்டியதாயிற்று.

ஈழநாடு ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர்களில் கே. பி. ஹறன், இராஜ அரியரத்தினம், என். சபாரத்தினம், எஸ். எம். கோபாலரத்தினம் மற்றும் சசிபாரதி சபாரத்தினம், பெருமாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆசிரிய பீடத்தில் இளந்தலைமுறையினர் பலர் உதவி ஆசிரியர்களாக இணைந்திருந்தனர். அந்தத் தலைமுறையினர் பலர் இன்று ஈழத்திலும் உலக நாடுகள் பலவற்றிலும்ஊடகத்துறையில்சிறந்துவிளங்குகிறார்கள்.

அவர்களில் ஒருவரான எஸ். கே. காசிலிங்கம் 1967 இல் ஈழநாடு ஆசிரிய பீடத்திற்குள் இணைந்து கொண்டார்.

அவரை எழுபதுகளின் தொடக்கத்திலிருந்தே யான் நன்கறிவேன். கொழும்புப் பத்திரிகைகளுக்கும், ஒலிபரப்புக்




கூட்டுத்தாபனத்துக்கும் செய்தியாளராக யான் கடமையாற்றிய காலமது. யாழ். குடாநாட்டுச் செய்திகளை கொழும்புப் பத்திரிகைகள், வானொலிக்கேற்றவாறு எழுதி அனுப்ப ஈழநாடு பெரிதும் உதவியதுண்டு.

தொடர்ச்சி ▼

# வேகமான எழுத்துக்கும் சிந்தனைக்கும் உரிய மூத்த பத்திரிகையாளர் காசிலிங்கம்!

தொடர்ச்சி ▲

அதிகாலை ஈழநாடு கிடைத்ததும் எமக்கேற்றவாறு சில செய்திகளை அதிலிருந்து திரட்டிக்கொள்வது முண்டு. ஈழநாடு ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த பலரையும் யான் நன்கறிவேன். எந்த வேளையிலும் ஈழநாடு கட்டட மேல்மாடியிலுள்ள அலுவலகத்தினுள் நுழைந்து ஆசிரிய பீடத்திலுள்ளவர்களுடன் உரையாடுவேன்.

நள்ளிரவு – அதிகாலைப் பொழுதுகளிலுங்கூட அவ்வாறு சென்றதுண்டு. அரசியல் – இலக்கியச் செய்திகளை வழங்கி அழகாகப் பிரசுரிக்குமாறு



கேட்டுக்கொள்வேன். மறுநாள் அவ்வாறே அவை பிரசுரமாகி மகிழ்ச்சியளிக்கும்.

அங்கு பணிபுரிந்த காசி அண்ணர், அழகாக உடையணிந்த, நிமிர்ந்த வேக நடைக்காரர். ஓட்டமும் நடையுமாக போவார். வேகமாகவே கதைப்பார். எழுத்தும் அப்படியே.

பரபரப்பான செய்திகளைத் துணிச்சலுடன் வெளிக்கொணர்வதில், அவற்றைச் சூட்டோடு தலைப்பிட்டுப் பிரசுரிப்பதில் வல்லவர். அதனால் சில பிரச்சினைகளைச் – சிரமங்களையும் அவர் எதிர்கொண்டதுண்டு.

பத்திரிகைத் துறையில் – ஊடகத் துறையில் பணியாற்றுபவர்கள் பலர் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிறார்கள் என்பர்.

நெருடல்கள் – நெருக்கடிகள் – பரபரப்புகள் – பதற்றங்கள் – சில வேளை பயமுறுத்தல்கள் மத்தியிலும் அவர்கள் பணியாற்ற வேண்டிய நிலைமைகள் ஏற்படுவதுண்டு.

உண்மைகளை யதார்த்தப்பார்வையோடு வெளிக்கொணரும்போது அவை வரலாற்றுப் பதிவுகளாகின்றன.

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நடைமுறைப் பிரச்சினைகளைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டுவதற்கு ஊடகங்கள் நம்பிக்கையளிப்பனவாக இருத்தல் வேண்டும்.

அந்த வகையில் பத்திரிகைத்துறையில் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த பலரை யான் அறிவேன். அவர்களில் ஒருவரான காசி அண்ணர் குறிப்பிடத்தக்கவர்.

1991 இல் யான் பிரான்ஸ் வந்ததும் காசி அண்ணரை "பாரிஸ் ஈழநாடு" அலுவலகத்தில் மீண்டும் சந்தித்துக்கொண்டேன். 'வந்துவிட்டாயா....." என மகிழ்வுடன் கதைத்தார். மூன்று மாத விசாவில் வந்த எனக்கு அகதி அடைக்கலம் கேட்பது குறித்து ஆலோசனைகள் சொன்னார்.

"பாரிஸ் ஈழநாடு" பத்திரிகையில் பணியாற்றிய அவர் பின்னர் "தமிழன்" பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றினார். பத்திரிகையில் இலக்கியப் படைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்துப் படைப்பாளிகளை ஊக்குவித்தார்.

பாரிஸ் மாநகரில் நடைபெறும் நூல் அறிமுக விழாக்கள், சங்கங்களின் ஆண்டு விழாக்கள் பலவற்றுக்கும் காசிலிங்கம் தலைமை வகித்து நடத்த அழைக்கப்படுவார்.

இலண்டன், ஜேர்மனி, சுவிஸ் ஆகிய இடங்களில் நடைபெற்ற விழாக்களிலும் அவர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதை யான் அறிவேன்.

மூத்த பத்திரிகையாளர் – ஆளுமை மிக்கவர் என்ற வகையில் அவருக்கு அந்தக் கௌரவம் வழங்கப்படுவதுண்டு.

தனது நீண்ட காலப் பத்திரிகைத்துறை அனுபவங்கள், வரலாற்று ரீதியாக அரசியல், புலம்பெயர் வாழ்வியல் என்பனவற்றைப் பதிவுசெய்யும் வகையில் 'என்னுள்... என்னோடு..." என்ற நூலை 2002 ஆம் ஆண்டு வெளியிட்டார். இதன் அறிமுக நிகழ்வுகள் ஐரோப்பாவின் பல நகரங்களிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

எனது நூல்களின் வெளியீட்டு விழாக்கள், அறிமுக நிகழ்வுகள் பலவற்றுக்கும் அவர் தலைமை வகித்துச் சிறப்பித்துள்ளார்.

ஊரில் சமூக முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு செயற்பட்டவர். அனலைதீவின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, பத்திரிகையில் செய்திகளைப் பிரசுரித்து நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்தை ஈர்த்தவர். அதனால் அனலைதீவுப் பாடசாலைகளின் வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறை நீங்க உந்துசக்தியாகச் செயற்பட்டதை யான் அறிவேன்.

'பிரான்ஸ் – அனலைதீவு மக்கள் ஒன்றியம்" சிறப்பாகச் செயற்பட ஊக்கமளித்தார். பிறந்த ஊரின் சிறப்புகளை வெளிப்படுத்துவதில் மகிழ்பவர்.

2014 ஆம் ஆண்டு அனலைதீவு மக்கள் ஒன்றியத்தின் சிறப்பு மலரான "அனலைத் தென்றல்" மலரைத் தொகுத்துப் பதிப்பிக்கும் பொறுப்பை எனக்களித்தார்.

அதன் ஆண்டு விழாவும் "அனலைத் தென்றல்" வெளியீடும் (22 – 06 – 2014) பாரிஸ் மாநகரில் எஸ். கே. காசிலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.

இவ்விழாவில் எனது சில நூல்களின் அறிமுக நிகழ்வும் நடைபெற காசி அண்ணர் ஊக்கமளித்தார். இந்நிகழ்வில் "கல்விச் சேவையாளர்" சி. காராளபிள்ளை நூல்கள் குறித்துச் சிறப்புரையாற்றினார்.

அவர் அன்பாகப் பழகக் கூடிய பண்பாளர். பத்திரிகை , அரசியல், இலக்கியம் குறித்து வரலாற்று ரீதியாக அவருடன் உரையாடினால் பல தகவல்கள் பெற்றுக் கொள்ளலாம் என நண்பர்கள் சொல்லிக்கொள்வர்.

பிரான்ஸ் நாட்டில் அவ்வாறு பண்போடு உரையாடுவதற்கு ஏற்ற மூத்த ஆளுமை மிக்கவர்களில் அவர் குறிப்பிடத்தக்கவர். அமுத விழா காணும் அன்புள்ளம் மேலும் பல்லாண்டுகள் வளமுடன் வாழ வாழ்த்துவோம்.

# மணல் அகழ்வு, காற்றாலைத் திட்டங்களால் மன்னார் பாரிய அழிவைச் சந்திக்கும் நிலை!

## சமூக செயற்பாட்டாளர் டிலக்சன் தெரிவிப்பு



(த.சுபேசன்)

மணல் அகழ்வு மற்றும் காற்றாலைத் திட்டங்களால் பத்து வருடங்களுக்குள் மன்னார் மாவட்டம் பாரிய அழிவை எதிர்நோக்கும் என்று மன்னாரைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் டிலக்சன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் கைதடியில் இடம்பெற்ற மாகாண மட்ட ஊராட்சி முற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களுடைய எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளால் அதிகளவில் மன்னார் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எல்லை தாண்டிய மீன்பிடியால் ஒட்டுமொத்த வடமாகாண மீனவர்களும் வாழ்வாதார ரீதியாக பாதிப்படைகின்றனர். இதனால் வடக்கு மீனவர்கள் உயிர் அச்சுறுத்தல்களுக்கு ஆளாவதுடன் தமது உடமைகளையும் இழக்கின்றனர்.

அத்துடன் மன்னாரில் முன்னெடுக்கப்படும் காற்றாலைத் திட்டத்தை மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய இடத் தெரிவுகளை மேற்கொண்டு முன்னெடுக்க வேண்டும்.

காற்றாலைத் திட்டத்தால் இதுவரை வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படாத பிரதேசங்கள் கூட வெள்ள அனர்த்தத்தை எதிர்கொள்கின்றன.

மக்களுடைய வாழ்வாதாரம் மற்றும் இயல்பு வாழ்வு பாதிக்கப்படாத விதத்தில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மன்னாரில் மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிப்படையும் விதத்தில் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு, கனிம மணல் அகழ்வு, காற்றாலைத் திட்டம் மற்றும் எல்லை தாண்டிய மீன்பிடி உள்ளிட்ட செயற்பாடுகளால் விரைவில் மன்னார் மக்கள் பாரிய அனர்த்தத்துக்கு முகம் கொடுக்க நேரிடும்.

மணல் மேடாக இருந்த மன்னார் தீவு இன்று அதிகரித்த மணல் அகழ்வால் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொள்கிறது.- என்றார்.



# ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதியில் மன்னாரில் பனைசார் உற்பத்திகள்

(த.சுபேசன்)

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதியுதவியில் மாத்தறையைச் சேர்ந்த சுபகாந்தா நிறுவனத்தால் மன்னாரில் பனை சார் உற்பத்திப் பயிற்சி நெறி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியினை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் மற்றும் மன்னார் நகர் பிரதேசசெயலர் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்திருந்தனர்.

சுபகாந்தா நிறுவன பணிப்பாளர், மன்னார் மாவட்ட பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் மற்றும் பனை அபிவிருத்திச் சபையின் போதனாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாறான பயிற்சி நெறிகள் பனை சார்ந்த தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த உதவும்.

பனைசார் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதிகள் அதிகரித்துவரும் நிலையில் இவ்வாறான பயிற்சிகள் புதிய தொழில் முயற்சியாளர்களுக்குச் சிறந்ததொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்.

பனை சார்ந்த உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வேளையில் இவ்வாறான ஊக்குவிப்புத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து சிறந்த பனைசார் உற்பத்திகள் கிடைக்கின்றன. அதன் அடிப்படையில் மன்னாரின் தனி அடையாளத்துடன் அந்த உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியும்.- என்றார்.

நிகழ்வில் கருப்பட்டி உற்பத்தியாளர்களுக்கு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நகர்வு மாதத்தை முன்னிட்டு கல்முனையில் விழிப்புணர்வு

(றியாஸ் ஆதம்)

உலக சுகாதார ஸ்தாபனம், ஏப்ரல் மாதத்தை நகர்வு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த மாதத்தில் உடல் செயல்பாடுகளை அதிகரிக்கவும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அவசியமான உடற்பயிற்சியை ஊக்குவிக்கவும் சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

அந்த வகையில் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு சனிக்கிழமை கல்முனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், சுகாதாரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள்கள், ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தினசரி உடற்பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாக ஆரம்பமான இந்த விழிப்புணர்வு பேரணி, அக்கரைப்பற்று மட்டக்களப்பு பிரதான வீதியூடாக கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலைவரை சென்று மீண்டும் அவ் வீதியூடாக கல்முனை பொதுச் சந்தையை அடைந்து அங்கிருந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை வந்தடைந்தது.

தொங்கோட்டம், நடைபயிற்சி, சைக்கிள் ஓட்டம் என பல முக்கிய நிகழ்வுகள் இந்தப் பேரணியில் உள்ளடங்கி இருந்தன.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் உடற்பயிற்சியின் அவசியம் குறித்து சுலோகங்கள் அடங்கிய பதாதைகளுடன் சென்றமை குறிப்பிடத்தக்கது.









# இறம்பொடை விபத்தில் காயமடைந்தோரை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார் பிரதமர்

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

நுவரெலியா, கொத்மலை, இறம்பொடை, கெரண்டி பஸ் விபத்தில் காயமடைந்தவர்களை நேரில் சென்று பார்வையிட்ட பிரதமர் ஹறினி அமரசூரிய.

இந்த பஸ் விபத்தில் காயமடைந்தவர்களை நேற்று (11) இரவு ஞாயிற்றுக்கிழமை இரவு பிரதமர் கலாநிதி ஹறினி அமரசூரிய கம்பளை வைத்தியசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அங்கு சென்ற பிரதமர் காயமடைந்தவர்களின் நலனை விசாரித்ததோடு வைத்தியசாலையில் செயலாளர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் வசதிகள் குறித்தும் ஆராய்ந்தார். இதேவேளை அமைச்சர் பிமல் ராமநாயக்கவும் சென்றிருந்தார்.

சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹறினி அமரசூரிய,

இது போன்ற வாகன விபத்துக்களால் ஒவ்வொரு வருடமும் உயிரிழப்புகள் ஏற்படுகின்றமை பாரிய பிரச்சினையாக மாரியுள்ளது என்பது எமக்கு தெரியும். இதனைத் தடுப்பதற்குப் போக்குவரத்து அமைச்சர் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

பின் தங்கிய பிரதேசமாக இருந்தாலும் வைத்திய சேவையை வழங்குகின்றமை தொடர்பில் அவர்களுக்கு நாம் நன்றி கூற வேண்டும். இதேவேளை மீட்பு பிரிவினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். முடியுமான அளவு மனிதாபிமானத்தோடு செயற்பாட்டு உதவிகளை வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.– என்றார்.














### பேரிடர் காலத்தில் தீராப்பசி தீர்த்த:

# ஆர்மேனியருக்கு மதாக்! யூதர்களுக்கு மனா!!

# தமிழருக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி...!!!



**- நவீனன் -**

ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாது தடுத்து இனப்படுகொலை செய்வது மாத்தரமின்றி – அந்த மக்களைப் பட்டினி போட்டுக் கொல்வதும் கொடுமையிலும் கொடுமையான இனப் படுகொலையாகும்.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை

தொடர்ச்சி ▼

# பேரிடர் காலத்தில் தீராப்பசி தீர்த்த: ஆர்மேனியருக்கு மதாக்! யூதர்களுக்கு மனா!!

தொடர்ச்சி ▲

ஏற்படுத்துவது இனப் படுகொலை என்று சர்வதேச சட்டப்படி கருதப்படுகிறது.

இக்கோர இனப்படுகொலைகளை எதிர் கொண்ட மக்கள், எப்படி வாழ்வின் இறுதிக் கணங்களில் போராடியிருப்பார்கள் என்பதை எழுத்தில் வடிக்க முடியாது. கட்டாய பட்டினியால் மக்கள் எவ்வாறு போர்க்கால உணவைப் பெற்றார்கள் என்பதை அலசும் சிறிய ஆவணம் இது.

### ஆர்மேனிய இனப்படுகொலையும் மதாக் உணவும்

இருபதாம் நூற்றாண்டின் முதலாவது பெரும் இனப் படுகொலையாக துருக்கியில் ஒட்டோமான் ஆட்சியில் ஆர்மேனியர்கள் மீதான படுகொலைதான் வரலாற்றில் பதியப்பட்ட கோர நிகழ்வாகும்.



இந்த கொடூர சம்பவத்தை உலகமே இனப் படுகொலை என்று கூறியபோது, துருக்கி அதனைக்க கடுமையாக எதிர்த்து வருகிறது. ஆர்மேனிய இனப் படுகொலை இந்த நூற்றாண்டின் மிக கோரமான கொடூரங்களில் ஒன்றாகும். ஒரு நூற்றாண்டு கடந்தும் அட்டூழியங்களால் ஏற்பட்ட வடுக்கள் அழுத்தமாக பதியப்படுத்தப்பட்டுள்ளன.

20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய படு கொலையாகக் கருதப்படும் ஆர்மேனிய படுகொலையில் "மதாக்" (Madagh) என்ற ஒருவகை உணவு தான் அவர்களை உயிரோட்டமாக வைத்திருந்தது.

மதாக்கை ஆர்மேனிய மக்கள் தங்களின் பண்பாட்டு உணவாகவும் இனப்படுகொலையின் அவலம் நிறைந்த உணவாகவும் முன்னிலைப்படுத்தியுள்ளனர். தாங்கள் புலம்பெயர்ந்த பகுதிகளில் அதன் வலிகளை உணர்ந்து அடுத்தடுத்த தலைமுறையினருக்கு இதனை உணர்த்தி வருகின்றனர்.

ஆர்மேனிய இன அழிப்பைப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது, 1915 ஆம் ஆண்டில் மொத்தமாக 15 லட்சம் ஆர்மேனிய மக்களைக் கொன்று குவித்த, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலையாக – ஓர் வரலாற்று கொடூரமாக இது பதியப்பட்டுள்ளது.

ஆர்மேனிய இனப்படுகொலையை ஏப்ரல் 24 அன்று உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ஆர்மேனியர்கள், இறந்த தங்கள் மூதாதையர்களின் இழப்பை நினைவு கூர்ந்து மதிக்கிறார்கள்.

ஒட்டோமான் படைகளால், திட்டமிட்ட வகையில், 15 லட்சம் ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டனர் என்று ஆர்மீனிய வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### யூதப் படுகொலை ஹாலோகோஸ்ட்

இரண்டாம் உலகப் போரில் 1941 இல் இருந்து 1945 வரை, யூதர்கள் ஒரு இனப்படுகொலை மூலம் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டனர். நாஸி கட்சியின் உயர் தலைமையின் வழிகாட்டல்கள் உடன், ஜேர்மனி அரசின் அதிகார மையத்தின் ஒவ்வொரு பகுதியும் ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா முழுவதும் பெரும் படுகொலைகளை நடத்துவதில் ஏற்பாடுகள் செய்வதில் ஈடுபட்டு வந்தது.

இந்தப் பெரும் இன அழிப்பு இரண்டாம் உலகப் போரில், 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்கள் ஜேர்மனியில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் ஹாலோகோஸ்ட் (u;olocaust) என்று குறிப்பிடுவர்.

ஜேர்மனியில் ஆட்சியில் இருந்த, அடொல்ஃப் ஹிட்லரின் நாஸி இன அழிப்புக் கொள்கையின் படி, பல அறிஞர்கள் பெருமளவில் இந்த இன அழிப்பில் கொல்லப்பட்டனர்.

ஜேர்மன் அரசு இதனை "யூதர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு" என வர்ணித்தது. நாஸி ஜேர்மனியில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட எல்லாப் பிரிவினரதும் மொத்தத் தொகை 9 தொடக்கம் 11 மில்லியன்வரை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

### யூதர்களின் பட்டினி தீர்த்தது 'மனா'

வரலாற்று ரீதியாக இஸ்ரேலியர்களின் எகிப்திய அடக்கு முறையின் கசப்பைக் குறிக்கும் அடையாள உணவான "மனா" (Manna) எனும் உணவை நாஸி வதை முகாம்களில் உண்டதாகவும் சான்றுகள் உள்ளன.

மனா என்பது பைபிளின் படி, இஸ்ரேலிய யூதர்கள் நீண்ட இடப்பெயர்வில், பாலைவனத்தில் பயணம் செய்தபோது கடவுள் அவர்களுக்கு வழங்கிய ஒரு உண்ணக் கூடிய பொருள் என்றும் பொருள்படும்.

யூதர்களின் நீண்ட இடப்பெயர்வு (எக்ஸோடஸ்) வரலாற்று புத்தகத்தில், மனா தரையில் வீழ்ந்த

தொடர்ச்சி ▼

# பேரிடர் காலத்தில் தீராப்பசி தீர்த்த: ஆர்மேனியருக்கு மதாக்! யூதர்களுக்கு மனா!!

தொடர்ச்சி ▲

உறைபனி போன்ற நல்ல, செதில் போன்ற பொருள் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இரவு நேரத்தில் பனியுடன் வந்து சேருவதாகவும், இது சூரியனின் வெப்பத்தால் உருகுவதற்கு முன் சேகரிக்கப்பட வேண்டும் என்றும், ஒரு கொத்தமல்லி விதை போன்று, வெள்ளை நிறத்தில் இருந்தது என்றும் எக்ஸோடஸ் நூல் மேலும் கூறுகிறது.

### முள்ளிவாய்க்காலும் இனவழிப்பும்

2009 மே இறுதிப் போரின், இறுதி நாள்களில் மக்களுக்கு உணவு, மருத்துவ தேவைகள் முற்று முழுலாகத் தடுத்து நிறுத்தப்பட்டப் போது, களமுனைப் போராளிகளுக்காகச் சேமித்து வைத்திருந்த அரிசிகளைக் கொண்டு பட்டினியால் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தண்ணிரும் அரிசியும் கொண்ட கஞ்சி சமைத்துக் கொடுக்கப்பட்டது.

நந்திக்கடலின் இருபுறமும் பெருந்திரளாக வந்த மக்களைக் கொத்துக் கொத்தாய் கொன்ற துயரம் ஒருபுறமும் மிச்சமிருக்கும் உயிரைக் காக்க மறுபுறமும் இருக்க, இடையில் பட்டினியால் தகித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தேவாமிர்தமாக இறுதிநாள்களில் இருந்தது தான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி.

முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது தமிழர்களின் குறியீட்டு உணவு. எங்கள் மீது நிகழ்ந்தப்பட்ட கொடூர இனவழிப்பு நிகழ்வை, இனிவரும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உணர்த்த வேண்டும்.

ஈழத்தில் "மே 18" என்னும் உணர்வு, விசேட உணவாக இருக்க வேண்டும். ஆண்டுக்கொரு முறை செய்யப்படுகிற அருமருந்தாக அது இருத்தல் வேண்டும். எல்லோரும் கூடுகிற இடங்கள் என்றில்லாமல், எங்கும்,எவரும், அந்த நாளில் கஞ்சி செய்து உண்ண வேண்டும். அந்த நாளின் அடையாளமாக அது அன்றைய நாளின் வீட்டு உணவாகவும் இருக்க வேண்டும்.

### மே 18 - முள்ளிவாய்க்கால் கஞ்சி

மிகக்குறைந்தளவிலான அரிசி, நெல், தண்ணீர் என்கிற இந்த மூன்று பொருள்களாலானதே முள்ளிவாய்க்கால் கஞ்சியாக போர்க் களத்தில் தயாரிக்கப்பட்டது.

முக்கியமாக உப்பு, பால் என்பவை அறவே அற்றதாகவே முள்ளிவாய்க்கால் கஞ்சி இருக்க வேண்டும். அப்படித்தான் அது அன்றைய நாளில் இருந்தது. சுவையற்ற நீருணவு அது. அதிக தண்ணீரில் மிகவும் குறைந்த அளவு அரிசியைக் கொண்டதாக அது இருந்திருக்கலாம். அப்படித்தான் அது தயாரிக்கப்பட்டது.

உணவு என்பதற்கு மேலாக, அந்த நாளின் பெறுமதியும், அதன் நோக்கமும் புரியும் வகையில் அதை நாம் தயாரித்துப் பரிமாற வேண்டும். இதன் மூலமே "முள்ளிவாய்க்கால் கஞ்சி" என்கிற வரலாற்று அடையாளத்தை நாம் பேணலாம்.

### சோழர்களின் கூழ்வார்க்கும் விழா

இந்தியாவில் காலனித்துவ ஆட்சியில் உருவாக்கப்பட்ட பட்டினிச் சாவுகள் எண்ணிலடங்காதவை. ஆங்கிலேயர்களும் உணவை ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தியதற்கும் சான்றுகள் பல உண்டு.

ஆங்கிலேய ஆட்சியின்போது திட்டமிட்டு உருவாக்கப்பட்டப் பெரும்பஞ்சத்துக்குச் சோழமண்டல பகுதிகளில் பட்டினிச்சாவு தலைவிரித்தாடியது. அப்போது கம்பு-கேப்பை போன்ற தானியங்களை பயன்படுத்தி கூழாக மக்களுக்கு வழங்கப்பட்ட துயரத்தின் நீட்சியை பண்பாட்டு வழிநின்று ஆடி மாதங்களில் "கூழ்வார்க்கும் விழா" பல பகுதிகளில் நடந்து வருகிறது.

வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது.

காலனித்துவ வரலாற்றின் கொடுமைகள் இன்னமும் ஏதோ ஓர் வகையில் தொடர்கிறது. இவை எல்லாம் மானுட தர்மம் நீதியற்றுப் போயுள்ளதையும் வரலாற்றின் துயரமாகவும் பார்க்கலாம்.

### எதிர்கால தலைமுறையும் முள்ளிவாய்க்கால் கஞ்சியும்

வரலாற்றின் வழி நின்று, இனப்படுகொலை நினைவேந்தல் நாள்களில் தமிழ்ச் சமூகம் நிச்சயமாக "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" தங்கள் வீடுகளில் செய்து நாம் நம் அடுத்த தலைமுறைகளுக்கு துயரம் தோய்ந்த நாள்களை நினைவுப்படுத்த வேண்டும். அத்தோடு நின்றுவிடாமல் அந்த வலியை உணர்ந்து கொள்வதற்கும் உணவு பண்பாடு மூலம் இன வழிப்பின் குறியீடாகவும் உணர்த்த வேண்டும்.

தாயக மண்ணில், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவு கூர்ந்து வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டை முன்னெடுப்பதே இதன் நோக்கமாகக் கருதப்படுகிறது.

போர்க்கால வாழ்வை மீள் நினைவுபடுத்தும் வகையில் எமது உறவுகளின் உயிர்காத்த அரிசியும், தண்ணீரும், உப்பும் கலந்தாக்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியை 18 மே அன்று வீடுகளில் காய்ச்சிப் பருகுவதன் மூலம் அந்த நாள்களின் நினைவுகளை

தொடர்ச்சி ▼

# பேரிடர் காலத்தில் தீராப்பசி தீர்த்த: ஆர்மேனியருக்கு மதாக்! யூதர்களுக்கு மனா!!

தொடர்ச்சி ▲

அடுத்த சந்ததியும் இந்த அழியாத நினைவுகளை மறவாதிருக்க வேண்டும்.

**அரசின் திட்டமிட்ட உணவுத் தடை**


இறுதிப் போரில் சிங்கள அரசின் திட்டமிட்ட உணவுத் தடையாலும் பல மாத கால தொடர் யுத்தத்தாலும் மக்கள் உணவின்றித் தவித்தனர். பலருக்கு ஒரு நேர உணவு கூடக் கிடைக்காமல் பட்டினி கிடந்தார்கள். குழந்தைகளுக்கான உலர் உணவுக்கு அலைந்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில் போராளிகளுக்காக ஒதுக்கப்பட்ட உணவுப் பொருள்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மக்களுக்கு வழங்கியது. அக்கால கட்டத்திலேயே கஞ்சி வழங்கும் பணியும் தொடங்கப்பட்டது. இறுதிக் காலகட்டத்தில் சிறிய தொகை அரசியே இருந்தபடியால் அரிசியும் தவிடும் கலந்து உப்புமிட்டு முள்ளிவாய்க்கால்க் கஞ்சியாகக் கொடுக்கப்பட்டது.

அக்கஞ்சியைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பல இடங்களில் செய்து மக்களின் பசியை ஆற்றினார்கள். யுத்தம் முடிவுற்றுப் பல ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும் யுத்தம் தந்த வடுக்களை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. இவ் யுத்தகால நினைவுகளில் மறக்கமுடியாதவற்றுள் ஒன்றாக விளங்குவது தான் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி.

பல லட்சம் மக்கள் கஞ்சிக்காகக் காத்திருந்து தமது பசிப்பிணி போக்கிய வரலாறுகளும் உண்டு. இந்தக் கஞ்சி உணவு அன்றைய நாள்களில் எமது மக்களின் வாழ்வோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்ததாகவே காணப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் உணவுக்காகப் பட்ட அவலத்தையும், கஞ்சி உணவே எமது உறவுகளின் உயிரைத் தக்க வைத்தது என்பதையும் வெளிப்படுத்தும் முகமாகவும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் தெரியப்படுத்தும் முகமாகவும் நினைவேந்தல் நாள்களில் கஞ்சி உணவை வழங்குவது வழமையாகும். மே 18 இன அழிப்பு நாளை நினைவு கூரும் போது முள்ளிவாய்க்கால் நிலத்தில் விடுதலைக்குப் போராடிய ஈழத்தமிழினம் பட்ட துன்பத்தையும் உலகத்தமிழினம் நினைவு கூருவது சாலத் தகுந்தது.




முள்ளிவாய்கால் கஞ்சி உணவு அடையாளம். இது பற்றியும் தாயக மண்ணின் வலிகளையும் வரலாற்றையும் சந்ததி மறவா சரித்திரமாக வேண்டும்.

இந்தக் கஞ்சி உணவின் மூலம், முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போது எமது உறவுகள் உணவுக்காகப் பட்ட துன்பத்தை நாம் மட்டுமல்லாது எதிர்கால சந்ததியும், முழு உலகமும் அறிய வேண்டும்.








### அருட்கலாநிதி சந்துரு பெர்னாண்டோவுக்கு

# எருசலேம் பல்கலை. இறையியல் கல்லூரியில் கௌரவ முனைவர் பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

**(.எஸ்.ஆர்.லெம்பேட்)**

அதி வணக்கத்துக்குரிய பிதா அருட் கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண் டோவுக்கு எருசலேம் பல்கலைக் கழகத்தின் இறையியல் கல்லூரி யில் முனைவர் பட்டம் வழங்கப் பட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் பிரதம ரின் மதவிவகாரங்களுக்கான இணைப்பு செயலாளரான இவர் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத் தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதருமாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.






# பெரிய நீலாவணையில் விபுலானந்தர் வீதி திறப்பு

**( வி.ரி.சகாதேவராஜா)**

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலா நந்த அடிகளாரின் துறவறதின நூற் றாண்டு விழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை, பெரிய நீலாவணையில் சுவாமி விபுலானந்தர் வீதிக்கு பெயர் பதாதை திறந்து வைக் கும் நிகழ்வு நேற்று (11) ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செய லாளர் தி.ஜே.அதிசயராஜ் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப் பாளர் ய. அநிருத்தனன் கலந்து கொண்டார்.

மற்றும் பல பிரமுகர்கள், அறநெறி ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர்.







# வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மட்டு. சிறையிலிருந்து 15 கைதிகள் விடுவிப்பு

(வாலகிருஸ்ணா)

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் இன்று (12) மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 14 ஆண் கைதிகளும் ஒரு பெண் கைதியுமாக 15 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பிரதம ஜெயிலர் உள்ளிட்ட சிறைச்சாலையின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த தண்டனைப் பணம் செலுத்தாத கைதிகளே இவ்வாறு இன்றைய தினம் இலங்கை முழுவதும் உள்ள சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் இருந்து மொத்தம் 388 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.



# கல்முனை பொலிஸ் நிலையத்தில் வெசாக் தின நிகழ்வு!





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு கல்முனை தலைமை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த விசேட வெசாக் தின நிகழ்வு இன்று (12) பொலிஸ் நிலையத்தின் முன்றலில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றம்ஸீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டது. கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.எஸ்.ரத்நாயக்க உட்பட இராணுவ உயர் அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸ் தலைமை அலுவலகத்தில் வெசாக் கூடுகள் கட்டப்பட்டு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில்

# முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோரின் ஆத்ம சாந்திக்காக பூசை வழிபாடுகள்!

**(வடமராட்சி நிருபர்)**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நாளாகிய இன்று (12) உயரிழந்த எமது உறவுகளின் ஆத்மா சாந்திக்கான பூசை வழிபாடு தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தலைமையில் இந்த முள்ளிவாய்க்கால் வாரத்தின் ஆரம்ப நாள் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.





## இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தம்:

# முப்படை தளபதிகள், அமைச்சர்களுடன் பிரதமர் மோடி இன்றும் ஆலோசனை

இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி இன்றும் ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

டில்லியில் உள்ள பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான், விமானப் படைத் தளபதி ஏ.பி. சிங், ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி, வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் ஊடுருவிய பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த 22 ஆம் திகதி கொடூர தாக்குதல் நடத்தி சுற்றுலா பயணிகள் உட்பட 26 பேரை சுட்டுக் கொன்றனர். இதற்கு பதிலடியாக 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை இந்திய இராணுவம் கடந்த 7 ஆம் திகதி மேற்கொண்டு, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள 9 தீவிரவாத முகாம்கள் மீது குண்டுகளை வீசியது.



இதில், 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மறுநாள், ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களில் உள்ள 15 முக்கிய நகரங்களை குறிவைத்து ஏவுகணை மற்றும் 400 ட்ரோன்களை பாகிஸ்தான் வீசியது. இந்தியா தனது அதிநவீன ஆயுதங்களான எல்-70 பீரங்கி, சில்கா பீரங்கி, எஸ்-400 (சுதர்சன சக்கரம்) உள்ளிட்டவற்றால் பாகிஸ்தானுக்கு கடுமையாக பதிலடி கொடுத்தது.

பாகிஸ்தான் வீசிய ட்ரோன்கள், ஏவுகணைகளை இந்திய படைகள் வெற்றிகரமாக நடுவானிலேயே தகர்த்து அழித்து, பாகிஸ்தானின் பதில் தாக்குதலை முறியடித்தன. பாகிஸ்தானின் 3 முக்கிய விமான தளங்கள் உட்பட 8 இராணுவ மையங்களை குறிவைத்து, இந்திய போர் விமானங்கள் கடந்த 10 ஆம் திகதி காலை தாக்குதல் நடத்தின. இதில் பாகிஸ்தானுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

இந்த சூழலில், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் தீவிரம் அடைந்ததால், அமெரிக்க அதிகாரிகள் தலையிட்டு உடனடியாக போர் நிறுத்தம் செய்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். போர் நிறுத்தத்துக்கு பாகிஸ்தான் சம்மதம் தெரிவித்ததை அடுத்து, இந்தியாவும் சம்மதம் தெரிவித்தது. இதையடுத்து, போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, இந்தியா மற்றும் பாகிஸ்தானும் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டன.

இதையடுத்து, பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறினால், தக்க பதிலடி கொடுக்குமாறு முப்படைகளுக்கும் பிரதமர் மோடி உத்தரவிட்டார். தீவிரவாத ஊடுருவலை முற்றிலும் தடுப்பதற்கான வழிகள் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இந்த பின்னணியில், இன்றும் பிரதமர் மோடி தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளார்.





## கூவாகம் திருவிழா 2025:

# தூத்துக்குடியை சேர்ந்த சக்தி 'மிஸ் திருநங்கை' ஆக தேர்வு

விழுப்புரத்தில் நேற்று இரவு நடைபெற்ற விழாவில் 'மிஸ் திருநங்கை' பட்டத்தை தூத்துக்குடியைச் சேர்ந்த சக்தி என்ற திருநங்கை பெற்றுள்ளார்.

தேசிய திருநங்கைகள் கூட்டமைப்பு மற்றும் தொண்டு நிறுவனங்கள் சார்பில் 'கூவாகம் திருவிழா - 2025' விழுப்புரம் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள நகராட்சி திடலில் நேற்று இரவு நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வாக, 'மிஸ் திருநங்கை'பட்டத்துக்கான போட்டி தொடங்கியது. 14 திருநங்கைகள் பங்கேற்றனர். இரண்டு சுற்றுகளாக போட்டி நடத்தப்பட்டது. பட்டு புடவை மற்றும் நாகரிக உடைகளை உடுத்திக் கொண்டு ஒய்யார நடை நடந்து திருநங்கைகள் அசத்தினர். இதில் 'மிஸ் திருநங்கை' பட்டத்தை தூத்துக்குடியைச் சேர்ந்த சக்தி பெற்றார். இரண்டாவது இடத்தை சென்னையைச் சேர்ந்த ஜோதா, 3 ஆவது இடத்துக்கு சென்னையைச் சேர்ந்த விபாஷா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக நடிகர் விஷால் இரவு 9.15 மணிக்கு பங்கேற்றார். முன்னாள் அமைச்சர் பொன்முடி பேசியதும், நடிகர் விஷால் சுமார் 8 நிமிடம் பேசினார். பின்னர் அவர் இருக்கைக்கு திரும்பியதும், திருநங்கைகளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். அப்போது, அவருக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். அவரது கைகளில் நடுக்கம் ஏற்பட்டது. அவரது கை மற்றும் கால்களை உதவியாளர்கள் தேய்த்துவிட்டனர். மேடையில் அதிக எண்ணிக்கையிலான நபர்கள் கூடியதால் காற்றோட்டம் குறைந்ததே, நடிகர் விஷால் உடல்நிலை பாதிப்புக்கு காரணம் என மேடையில் இருந்த திருநங்கைகள் கூறினர்.






# போர் பதற்றம் காரணமாக மூடப்பட்ட 32 விமான நிலைய சேவை ஆரம்பம்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே கடந்த வாரம் நடந்த ஆயுத மோதலைத் தொடர்ந்து சிவில் விமானங்களை இயக்க 32 விமான நிலையங்களுக்கு விதிக்கப்பட்ட தடை திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இந்திய விமான நிலைய ஆணையம் இன்று திங்கள்கிழமை காலை வெளியிட்ட அறிவிப்பின்படி, 32 விமான நிலையங்களும் இப்போது சிவில் விமான போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளன.

இது குறித்து இந்திய விமான நிலைய ஆணையம், “இந்த விமான நிலையங்கள் இப்போது உடனடியாக சிவில் விமான போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளன. பயணிகள் விமான நிறுவனங்களுடன் நேரடியாக விமானங்களின் இயக்கம் குறித்து சரிபார்த்து, சேவையைப் பயன்படுத்திக் கொள்ள விமான நிறுவனத்தின் வலைதளங்களைக் கண்காணிக்க பரிந்துரைக்கப்படுகிறது.” என்று தெரிவித்துள்ளது.

ஆதம்பூர், அம்பாலா, அமிர்தசரஸ், அவந்திபூர், பதிண்டா, புஜ், பிகானீர், சண்டிகர், ஹல்வாரா, ஹிண்டன், ஜெய்சல்மார், ஜம்மு, ஜாம்நகர், ஜோத்பூர், கண்ட்லா, காங்ரா (காகல்), கேஷோட், கிஷன்கர், குல்லு மணாலி (பூந்தர்), லே, லுதியானா, முந்ரா, நாலியா, பதான்கோட், பாட்டியாலா, போர்பந்தர், ராஜ்கோட் (ஹிராசர்), சர்சாவா, சிம்லா, ஸ்ரீநகர், தோய்ஸ், உத்தர்லாய் ஆகிய 32 விமான நிலையங்கள் தற்போது மீண்டும் சிவில் விமான போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, இந்தியா - பாகிஸ்தான் இடையே அதிகரித்த பதற்றம் காரணமாக நாட்டின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் உள்ள இந்த 32 விமான நிலையங்களில் சிவில் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக இந்திய விமான நிலைய ஆணையம் கடந்த வாரம் அறிவித்தது. இது மே 9, 2025 முதல் மே 14, 2025 வரை (இந்திய நேரப்படி மே 15, 2025 அன்று காலை 05 29 மணிவரை) அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே, டில்லி சர்வதேச விமான நிலையம் வழக்கம்போல் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக டில்லி சர்வதேச விமான நிலைய லிமிடெட் இன்று வெளியிட்ட எக்ஸ் பதிவில், “விமான நிலைய செயல்பாடுகள் தற்போது சீராக இருக்கின்றன. இருப்பினும், மாறிவரும் வான்வெளி நிலைமைகள் மற்றும் அதிகரித்த பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக, சில விமான அட்டவணைகள் மற்றும் பாதுகாப்பு சோதனைச் சாவடி செயலாக்க நேரங்கள் பாதிக்கப்படலாம்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிலிப்பைன்ஸில் இடைக்கால தேர்தல்

பிலிப்பைன்ஸில் இடைக்கால தேர்தல் இன்று நடைபெறவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சுமார் 68 மில்லியன் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் ஜனாதிபதி ஃபெர்டினாண்ட் ‘பாங்பாங்’ மார்கோஸ் ஜூனியரின் ஆதரவு பெற்ற கட்சியின் வேட்பாளர்களும், துணை ஜனாதிபதி சாரா டுடெர்ட்டின் ஆதரவு பெற்ற கட்சியின் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

அந்நாட்டு நேரப்படி காலை 7 மணியிலிருந்து மாலை 7 மணிவரை வாக்களிப்பதற்கான வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் கட்சி வெற்றி பெறுமாயின், மாநில நிதியை தவறாக பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்படும் துணை ஜனாதிபதி சாரா டுடெர்ட்டேவை பதவி நீக்குவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு கைது செய்யப்பட்டால் அவர் 2028 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பக்கம் 03

கனடா முரசு

திங்கட்கிழமை 12/05/2025

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

கடந்த சனிக்கிழமை இரவு பிராம்ப்டனில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பீல் பகுதி பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02



# இனப்படுகொலை நினைவுத்தூபி தமிழர் வரலாற்றில் முக்கிய தருணம்

## கரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கனடா - பிரம்டனில் திறக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு தருணமாகும் என கனடாவின் நீதிய மைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

முகநூல் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழின அழிப்பால் உயிரிழந்தவர்கள், மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட தமிழின அழிப்பு நினைவுத்தூபி இன்றைய தினம் கனடா - பிரம்டன் நகரில் சிங்காவுசி பூங்காவில் திறந்து வைக்கப்பட்டது. 02

# தமிழர் இனப்படுகொலையின் அடையாளமே நினைவுச்சின்னம்

## கனடா எம்.பி. யுவனிதா நாதன் கருத்து




கனடாவின் பிரம்டனில் திறந்து வைக்கப்பட்ட தமிழர் இனப்படுகொலை நினைவுச்சின்னமானது எதிர்கால சந்ததியினர் கற்றுக்கொள்வதற்கான, சிந்திப்பதற்கான இடமாக மாறும் என்பது தனது நம்பிக்கை என கனடா நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிதா நாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த சக்திவாய்ந்த இடம் தமிழர் இனப்படுகொலையின் நீடித்த அடையாளமாக திகழ்கின்றது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"நேற்றைய தினம் அர்த்தபூர்வமானதாக அமைந்தது, தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை திறக்கும் நிகழ்வில் நான் எனது சமூகத்தவருடன் இணைந்துகொண்டேன்.

கனடிய தமிழர் தேசிய அவைக்கும், பிரம்டன் தமிழ் சங்கத்திற்கும் மேயர் பட்ரிக் பிரவுனிற்கும் நகரத்தின் கவுன்சிலர்களிற்கும் இந்த நினைவுத்தூபியை சாத்தியமாக்கிய சமூக அமைப்புகளின் தலைவர்களிற்கும் நான் நன்றியுடையவளாக உள்ளேன். 02




# வாகனத்தால் மோதி ஐந்து பேரை காயப்படுத்தி தப்பி சென்றவர் கைது

கனடாவில் வாகனத்தால் மோதி ஐந்து பேரை காயப்படுத்தி தப்பிச் சென்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் றொறன்ரோ மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழக வளாகத்தில் இந்த விபத்துச் சம்பவம் பதிவாகியிருந்தது.

இந்த வாகன விபத்தில் ஐந்து பாதசாரிகள் காயமடைந்திருந்தனர்.

இந்த நிலையில், மேற்படி சந்தேக நபரை பொலிஸார் தீவிரமாக தேடி வந்தனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றுடனும் இந்த நபர் தொடர்புபட்டிருந்தார் எனவும் அதன் அடிப்படையில் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.24 வயதான ரயன் பெட்ரோப் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.




## மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சம்பவம் இரவு 11 மணியளவில் கிரைஸ்லர் டிரைவ் மற்றும் கார்ப்பரேஷன் டிரைவ் சந்திப்பில் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த போது, மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பீல் அவசர மருத்துவப் பணியாளர்கள் அவரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பியதுடன், பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் மற்றொரு வாகனமும் இருந்ததாக கூறப்படுகிறது.

அந்த வாகனத்தின் சாரதி சம்பவ இடத்தை விட்டு விலகாமல் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணம் தொடர்பாக தற்போது பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சக்திவாய்ந்த இடம் தமிழர் இனப்படுகொலையின் நீடித்த அடையாளமாக திகழ்கின்றது, இழக்கப்பட்ட உயிர்கள், துண்டாடப்பட்ட சமூகங்கள் பலர் அனுபவித்த வேதனைகளிற்கான அடையாளமாக திகழ்கின்றது.

மேலும் இது தமிழ் சமூகத்தினர் மத்தியில் காணப்படும், வலிமை மீள் எழுச்சி தன்மை நீதிக்கான தொடர்ச்சியான போராட்டத்தையும் பிரதிபலிக்கின்றது.

மே மாதம் கனடா தமிழர்களிற்கு ஒரு வேதனையான குறிப்பிடத்தக்க மாதமாகும், உயிரிழந்தவர்களையும் தப்பியவர்களையும், அவர்கள் அனுபவித்தவற்றின் அதிர்ச்சிகளை தொடர்ந்து சுமந்துகொண்டிருப்பவர்களையும் நாம் நினைவுகூரும்போது, இந்த நினைவுச் சின்னம் அவர்களின் நினைவை போற்றுவதற்கும், வெறுப்பிற்கு எதிராக எழுந்து நின்று மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான கூட்டு பொறுப்பு குறித்து சிந்திப்பதற்குமான ஒரு இடத்தை வழங்குகின்றது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமளவில் வாழும் நாடு கனடா, அவர்களின் பங்களிப்பு கனடாவை எண்ணற்ற வழிகளில் வளப்படுத்தியுள்ளது.

இந்த நினைவுச்சின்னம் எதிர்கால சந்ததியினர் கற்றுக்கொள்வதற்கான சிந்திப்பதற்கான இடமாக மாறும் என்பது எனது நம்பிக்கை, நாம் அநீதியை எதிர்கொள்ளும் ஒருபோதும் மௌனமாக இருக்ககூடாது என்பதற்கான உண்மையான நினைவூட்டல்." என தெரிவித்துள்ளார்.

## இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழின அழிப்பு நினைவகம் என்ற பெயரில் அமைந்துள்ள இந்த நினைவுத்தூபியை பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் திரைச்சீலை நீக்கி உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கனடாவின் நீதியமைச்சர் கரி ஆனந்தசங்கரி,

"பிராம்ப்டனில் தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் திறக்கப்படுவது நமது கூட்டு வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தருணத்தைக் குறிக்கிறது.

இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையின் போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவி உயிர்களுக்கு இந்த நினைவுச்சின்னம் ஒரு நினைவுச்சின்னமாக நிற்கிறது." என குறிப்பிட்டுள்ளார்.



# கனடாவின் வேலையின்மை வீதம் ஏப்ரலில் 6.9 சதவீதமாக உயர்வு

கனடாவின் (Canada) வேலையின்மை வீதம் ஏப்ரல் மாதத்தில் 6.9 சதவிகிதமாக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மார்ச் மாதத்தில் 0.1 சதவிகிதமாக உயர்ந்த நிலையில், ஏப்ரலில் மேலும் 0.2 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

இந்த உயர்வால், வேலைவாய்ப்பு வீதம் 2024 நவம்பரில் இருந்த நிலைக்கு திரும்பியுள்ளது.

இது, 2020 மற்றும் 2021 இல் ஏற்பட்ட கோவிட் பாண்டமிக் ஆண்டுகளை தவிர்த்தால், 2017 ஜனவரிக்குப் பின் கனடா கண்டுள்ள அதிக வேலையின்மை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் வேலை தேடியவர்கள் கடந்த ஆண்டு இதே காலத்தை விட அதிக சிரமங்களை சந்தித்த நிலையில், மார்ச் மாதத்தில் வேலை இல்லாதவர்களில் 61 சதவிகிதம் ஏப்ரலிலும் வேலைவாய்ப்பு பெற முடியாமல் இருந்துள்ளனர்.

இது கடந்த ஆண்டை விட அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஏப்ரலில் மொத்த வேலை வாய்ப்பு பெரிதாக மாற்றம் இல்லாமல் இருந்துள்ளது.

அதாவது, வேலைவாய்ப்பு வீதம் 0.1 சதவிகிதம் குறைந்து 60.8 சதவிகிதமாக இருந்த நிலையில், 15 முதல் 69 வயதுடைய ஊழியர்களில் 13.2 சதவிகிதம், எதிர்வரும் ஆறு மாதங்களில் தங்கள் நிறுவனத்தில் பணியாளர்களின் எண்ணிக்கை குறையும் என எதிர்பார்த்துள்ளனர்.

அமெரிக்கா சார்ந்த ஏற்றுமதித் தொழில்களில் பணியாற்றும் ஊழியர்களில் இந்த எண்ணிக்கை 18.6 சதவிகிதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்றாரியோவில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது



வடக்கு ஒன்றாறியோவின் கெனோரா பகுதியில் இரண்டு மாதங்களுக்கு அதிகமாக முன்னெடுக்கப்பட்ட போதைப் பொருள் கடத்தல் விசாரணையையடுத்து, 64 வயதான ஒருவரை ஒன்றாறியோ மாகாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மார்ச் 2025 இல் தொடங்கப்பட்ட இந்த விசாரணையில் ஒன்றாறியோ பொலிஸாரின் பல்வேறு பிரிவினரும் இணைந்து கொண்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மே 6 ஆம் திகதி, சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன், அவர் வசித்த வீட்டிலும் வாகனத்திலும் பொலிஸார் தேடுதல் நடத்தியுள்ளனர்.

சுமார் 370 கிராம் சந்தேகத்துக்கிடமான கோகெய்ன், 350 கிராம் மெத்தாம்பட்டமின், 235 ஒக்ஸிகோடோன் மாத்திரைகள், 3,000 ஹைட்ரோமோர்போன் மாத்திரைகள் மற்றும் 5,630 டொலர் ரொக்கம் என்பனவற்றை சந்தேக நபரிடமிருந்து, பொலிஸார் மீட்டுள்ளனர். போதைப்பொருள்களின் சந்தை மதிப்பு சுமார் 185,000 டொலர்கள் என ஒன்றாறியோ மாகாண பொலிஸ் தெரிவித்துள்ளது.